முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 10.07.2025 ,அ.வ.எண். 369/2021 .வா.சா.2.ஸ்ரீகாந்த், த/பெ, அப்புகுட்டி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) 1 ம் வாதிக்கும் இறந்து போன பழனிச்சாமிக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 1990 ம் ஆண்டில் நடைபெற்றது, 2, 3 மனுவாதிகள் எப்போது பிறந்தார்கள் என்றால் 1991 ம் ஆண்டு 2 ம் வாதி மேனகா பிறந்தார். 1993 ம் ஆண்டில் 3 ம் வாதி தாரணி பிறந்தார் . 4 ம் எதிர்மனுவாதியை இறந்து போன பழனிச்சாமி எப்போது திருமணம் செய்தார் என்றால் திருமணம் செய்யவில்லை, 03.11.2000 ல் இறந்து போன பழனிச்சாமி 4 ம் எதிர்மனுவாதியை திருமணம் செய்து கொண்டார் என்றால் 2 வது திருமணம் எதுவும் செய்யவில்லை, எத்தனை வருடங்களாக 4 ம் பிரதிவாதி இறந்து போன பழனிச்சாமியுடன் குடித்தனம் நடத்தி வந்தார்கள் என்றால் தெரியாது. இறந்து போன பழனிச்சாமிக்கும் 4 ம் பிரதிவாதிக்கும் பிறந்த மகன் தான் 1 ம் பிரதிவாதி நித்திய சரண் என்றால் எனக்கு தெரியாது.

2) யார் என்னை நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல அழைத்தது என்றால் பழனிச்சாமியின் மனைவி 1 ம் வாதி சந்திரலேகா அழைத்தார். அவர் எனக்கு உறவினரா என்றால் இல்லை இறந்து போன பழனிச்சாமியின் அண்ணன் அந்தோணி எனக்கு 50 வருடங்களாக நண்பர் ஆவார். 1 ம் வாதியை எவ்வளவு ஆண்டுகளாக தெரியும் 30 ஆண்டுகளாக தெரியும். நான் நீதிமன்றத்தற்கு கடந்த 3 வாய்தாக்களாக 1 ம் வாதி சொல்லித்தான் வந்தேன் என்றால் சரிதான்,. 4 ம் பிரதிவாதிக்கு 1 ம் வாதி சொத்துக்கள் கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த 3 வாதிகளும்சேர்ந்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் 1 ம்

ஒப்பம்/- (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

பிரதிவாதிக்கு கிடைக்கக்கூடிய சொத்துக்களை தடுப்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இறந்த போன பழனிச்சாமியின் வாரிசு தான் 1 ம் பிரதிவாதி , 4 ம் பிரதிவாதி என்றால் சரியல்ல.

ஒப்பம்/– (R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.